பக்கங்கள்:09 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 12 திங்கட்கிழமை 27.12.2021 கதிர் 52

### இது ரகசியம் அல்ல!

நேற்றுப் பகல் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் உதவியாளர் ஒருவரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. “மனோ கணேசனுடன் என்ன பிரச்சினை?” – என்று விசாரித்தார்.

ஏன் என்று பக்கம்02»

# ஒரு இலட்சம் கோடி ரூபா வரிச் சலுகையால் ‘அவுட்’!

## கோட்டாவின் ஆட்சிக் கால சாதனை



கொழும்பு,டிசெம்பர் 27

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் வழங்கப்பட்ட வரிச் சலுகைகள் காரணமாக இரண்டு ஆண்டுகளில் அரசு, ஒரு இலட்சம் கோடி ரூபாவுக்கும் மேலான வரி வருமானத்தை இழுந்துள்ளதாக புள்ளி விவரத் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. ☞2

## கட்சியின் சக உறுப்பினர்களுக்குக் கூட தெரியாமல் பேசுவதுதான் ராஜதந்திரமா?

### பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் கேள்வி


(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,டிச.26

ஒரு கட்சியிலேயே இருக்கக் கூடிய ஏனைய உறுப்பினர்களுக்கு தெரியாமல் - என்ன நாங்கள் பேசப் போகின்றோம் என்பது தெரியாமல் - போய்விட்டு வந்து, ‘இராஜதந்திரம்’ என்று கூறுவதை நாங்கள் தொடர்ச்சியாக ஏற்றுக் கொண்டு இருக்கப் போகிறோமா என தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ☞9



## குளத்திலிருந்து சடலம் மீட்பு!



வவுனியா செட்டிகுளம், கலாசியம்பலாவ தம்பனைக்குளத்தில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள் ☞9

## வடக்கில் சீனாவின் ஈடுபாட்டை அடுத்து ‘றோ’வின் நடவடிக்கையும் அதிகரிப்பாம்

விடுதலைப் புலிகளை அரசியல் அரங்கில் இல்லாமல் ஆக்கிய பின் ஓய்ந்திருந்த றோ தனது பணிகளை தற்போது மீண்டும் முடுக்கியுள்ளதாம்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் குஷி யென் ஹோங் சோவின் வடபகுதி விஜயத்தின் பின்னர், இந்தியாவின் றோ புலனாய்வு சேவை, வடக்கில் உள்ள உளவு அணியை அதிகரித்துள்ளதாக சிங்கள பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள சாவக்கச்சேரியில் 'சைனா கொமியூனிகேன் கன்ஸ்ட்ரக்ஷன்' நிறுவனத்தின் அலுவலகம் திறக்கப்பட்டுள்ளமை குறித்து றோ கூடிய கவனத்தை செலுத்தியுள்ளது.

அத்துடன் சீன மக்கள் இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர், சீனத் தூதுவருடன் வட பகுதிக்கு விஜயம் செய்தமை தொடர்பாகவும் இந்தியப் புலனாய்வுச் சேவை தனது ☞9

## இந்திய மீனவர்களின் படகு ஒன்று இரணைதீவுப் போக்குவரத்துக்கு!

### அமைச்சர் டக்ளஸ் தகவல்



அண்மையில் இந்திய மீனவர்களிட மிருந்து கைப்பற்றப்பட்ட படகொன்று இரணைதீவு மக்களின் போக் குவரத்து தேவைக்காக கையளிக்கப்படவுள்ளதாகக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மயிலிட்டி ☞2

## இலங்கைப் பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கான ஐ.நா. நிதியை வெட்ட சீனா, ரஷ்யா தீவிர முயற்சி!

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம்

ஐக்கிய நாடுகள் சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு, செலவுத்திட்டம் தொடர்பான விவாதம் நடைபெற்று வருகின்றது. இவ்வரவு, செலவுத்திட்டத்தில் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் பொறிமுறைக்காக ஒதுக்கப்படவுள்ள நிதி மற்றும் ஆளணியில் குறைப்பைச் செய்வதற்கு சீனா மற்றும் ரஷ்யா ஆகிய பாதுகாப்புச்சபை உறுப்புரிமை நாடுகளும் இலங்கையும் தீவிர முயற்சிகளைமேற்கொண்டு வருகின்றன.

அவற்றின் முயற்சிகளைத் தோற்கடித்து மனித உரிமைகள் சார் செயற்திட்டங்களுக்கு உரியவாறு நிதியொதுக்கப்படுவதை உறுதிசெய்யவேண்டும் என்று ஐ.நா. உறுப்பு நாடுகளிடம் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:- ☞2

## பேராயர் டுட்டு காலமானார்



தென்னாபிரிக்காவில் நிறவெறிக்கு எதிராகப் போராடியவர்களில் ஒருவரும் அமைதிக்கான நோபல் பரிசு வென்றவருமான பேராயர் டெஸ்மண்ட டுட்டு தனது 90 ஆவது வயதில் ☞9

## பஸ் கட்டணங்கள் புதன் முதல் உயரும்

குறைந்த அளவான திருத் தங்களுடன் பஸ்கட்டணங்கள் அதிகரிக்கப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நேற்று கண்டி – அக்குறணைப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், எதிர் வரும் புதன்கிழமை முதல் கட்டண அதிகரிப்பு ☞9

## மாணிக்கவிநாயகம் நேற்றுக் காலமானார்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிச.27

இதய கோளாறு காரணமாக சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப் பட்டு சிகிச்சை பெற்று வந்த பிரபல பின்னணிப் பாடகர் ☞9

## ஆழிப்பேரலையின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் ஆறாத்துயரில் உறவுகள் ஒப்பாரி வைத்து அழுகை





### யாழில் வடமராட்சி கிழக்கில் பிரதான நிகழ்வு

ஆழிப்பேரலை பேரனர்த்தம் ஏற்பட்டு 17 ஆண்டுகள் கடந்தும் ஆறாத்து-யரில் உறவுகள் நேற்று ஒப்பாரி வைத்து அழுத காட்சி அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

கடந்த 2004ஆம் ஆண்டு ‘சுனாமி’ எனும் ஆழிப்பேரலை ஏற்பட்டதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான உயிர்கள் காவுகொள்ளப்பட்டன.

அதன் 17ஆம் ஆண்டு நினை வேந்தல் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாடெங்கும் அனுஷ்டிக்கப்பட்டது. ☞9

# தமிழரசுக் கொடி போர்த்தி எஸ்.ரி.ஆருக்கு அஞ்சலி



தமிழரசுக் கட்சியின் முன்னாள் பொருளாளர் மறைந்த எஸ்.ரி.தியாகராசாவின் (எஸ்.ரி.ஆரின்) பூதவுடலுக்கு தமிழரசுக் கட்சியின் தலைவர், மாவை சேனாதிராசாவும், கட்சியின் சிரேஷ்ட துணைச் செயலாளரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் எம்.பியும் நேற்று இறுதி நிகழ்வுகளின் போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மஞ்சள், சிவப்பு, பச்சை வர்ணக் கொடியைப் போர்த்தி கௌவித்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

நேற்று கொழும்பு கனத்தை பொரளையில் அவரது இறுதி கிரியைகளும் அஞ்சலி நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வினவினேன்.

“இல்லை. இன்றைய தமிழ்ப் பத்திரிகைச் செய்திகள் பற்றிய தகவல்களைக் கூறிய போது உங்கள் பத்தியில் வந்த மனோ கணேசன் பற்றிய குறிப்புகளைக் குறிப்பிட்டேன். பிரதமர் விசேட கவனம் எடுத்துச் செவிமடுத்தார். ‘அது எப்படி அந்த மூத்த பத்திரிகையாளரை மௌனம் பேணும்படி மனோ கணேசன் கோர முடியும்? இப்படி நாங்கள் கூறியிருந்தால் மனோ என்ன துள்ளல் துள்ளியிருப்பார்? ஊடக அடக்குமுறை என்று பாய்ந்திருப்பார்.’ – என்றெல்லாம் பிரதமர் கூறினார். அதை உங்களிடமும் கூறும்படி சொன்னார்.” – என்றார்.

“பிரதமருக்கு என் வந்தனத்தைக் கூறுங்கள். பிரதமரையும் விமர்சிப்பேன், மனோவையும் விமர்சிப்பேன். இருவருமே கோபிப்பார்கள். அது வழமை. அதை எதிர்கொள்வது எமது கடமை. எங்களை சகித்துக் கொள்வது அரசியல்வாதிகளின் பொறுப்பும் கூட. மற்றும்படி மனோ கணேசனும் என் நண்பர்தான். தமிழர்களுக்காக மட்டுமல்ல, இக்கட்டான சமயத்தில் எனக்காகவும் குரல் கொடுப்பவர். குரல் கொடுத்தவர். ஊடகங்களுக்காகவும், ஊடகவியலாளர்களுக்காகவுமே எப்போதும் கொதித்தெழுபவர் என்பதை நாம் மறந்த விடக்கூடாது. நண்பர்கள் ஊடல், கூடலில் முடிந்து விடும்.” – என்று விளக்கினேன்.

ஆனாலும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மூத்த அரசியல்வாதி. தமது காலத்து பத்திரிகையாளர்களை அவர் நன்கு அறிந்தும் வைத்திருக்கின்றார். அதுதான் அவரது வெற்றி. அவர் ஜனாதிபதியாக இருந்த போது – முழு அதிகாரத்தில் இருந்த சமயம் – யுத்தம் உச்சக் கட்டத்தில் இருந்த வேளையில் – அவரின் அலரி மாளிகையிலேயே, மற்றைய பத்திரிகையாளர்கள் முன்னிலையில் அவருடன் பெரும் வாதப் பிரதிவாத்தில் ஈடுபட்டிருக்கிறேன். அதுவும் அவரது படை நடவடிக்கைகளின் கொடூரத்தைப் பற்றி. முகம் சிவக்கக் கோபத்தில் என்னைப் பார்த்துச் சத்தமிட்டிருக்கின்றார். ஆனால் பகைமை பாராட்டியது குறைவு. நான் வெள்ளை வானில் கடத்தப்பட்ட பின்னரும் உயிரோடு மீண்டமைக்கு இந்த ஜனாதிபதி – பத்திரிகை ஆசிரியர் நட்புறவும் ஒரு காரணம்.

அவர் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி. இப்போது பிரதமர். இந்த அரசின் பிதாமகர். நானோ நாட்டின் எங்கோ ஓர் மூலையில் இருக்கும் சாதாரண பத்திரிகையாளன். அதையும் தாண்டி, நாட்டில் அவரை மிகமோசமாக விமர்சித்த – விமர்சிக்கும் – பத்திரிகையாளன். ஆனாலும் அரசியல்வாதி – ஊடகவியலாளன் மதிப்பும் புரிந்துணர்வும் நட்பும் நீடிக்கின்றன. அந்தப் பண்பியல்புதான் அவரின் அரசியல் வெற்றிக்கு – பெரும் சரிவுக்குப் பின்னரும் மீண்டெழுந்த அரசியல் சாதனைக்கு – காரணம் என்று நினைக்கிறேன்.

மனோ கணேசனும் கூட, அந்தப் பண்பியல்பில் மிக உயர்வானவர். விமர்சனங்கள், கோபதாபங்களுக்கு அப்பால் எங்கள் நட்புறவும் உயர்வாகவே இருக்கும். நின்று, நிலைத்து, நீடிக்கும்.

★ ★ ★

வெளி ஆரவாரம் இல்லாமல் ஒரு விடயம் எல்லாத் தமிழ் வீடுகளிலும் இப்போது அதிகம் பேசப்படுகின்றது. அது வெளிநாட்டு மாப்பிள்ளை அல்லது பெண் இங்கு ஊரில் உள்ள ஒருவரை இங்கு வந்து திருமணம் செய்வதானால், இனி எதிர்கொள்ளப்போகும் புதிய கெடுபிடிகள், கட்டுப்பாடுகள், விதிமுறைகள் குறித்து வெளியான செய்திதான்.

இலங்கையில் வலிமையான புலம்பெயர் சமூகத்தைக் கொண்டிருப்பவர்கள் தமிழர்கள்தான்.

அரசின் சம்பந்தப்பட்ட உயர்ந்த மட்டம் ஒன்றுடன் நேற்றுப் பேசினேன்.

“நீங்கள் சந்தேகப்படும் படியாக இது தமிழர்களை இலக்கு வைத்துக் கொண்டு வரப்பட்ட விதிமுறை அல்ல. புதிய விதிமுறையில் நாங்கள் தெளிவுபடுத்தி, உறுதிப்படுத்தக் கோரும் விடயங்களை, தமிழர்கள் தாங்களாகவே ஒன்றுக்கு இரண்டு தடவை விசாரித்து, உறுதிப் படுத்தி, உண்மைகளைக் கண்டறிந்த பின்னர்தான் திருமணத்தை நடத்துவார்கள். ஆகவே, இது அவர்களுக்காகக் கொண்டு வரப்பட்டதல்ல. நைஜீரியா போன்ற ஆபிரிக்க நாடுகளில் இருந்து இங்கு வந்து பலர் கடனட்டை மோசடியில் பெருமளவில் ஈடுபடுகின்றனர். அவற்றைச் செய்து பெருமளவு பணம் சுருட்டுவதற்கு அவர்கள் இங்கு வந்து தங்கியிருக்க வேண்டியிருக்கின்றது. அதற்காக இங்குள்ள வறிய ஆள்களைப் பெயருக்குத் திருமணம் செய்து பயன்படுத்தி விட்டுத் தப்பிச் சென்று விடுகின்றனர். விசாவுக்காக நடக்கும் திருமணங்கள் இவை. அத்தோடு ஈஸ்டர் குண்டு வெடிப்புத் தொடர்பாக விசாரணையை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரையில் இது முக்கிய அம்சம். இஸ்லாமியத் தீவிரப் போக்குடைய வெளிநாட்டவர்கள் இங்கு வந்து தங்கியிருந்து தமது மததீவிரப் போக்கு பயங்கவாத நடவடிக்கைளை முன்னெடுப்பதற்கு இங்குள்ளோரைத் திருமணம் செய்கின்றார்கள். அதனால் வெளிநாட்டவர்களைத் திருமணம் செய்வோர் குறித்துத் தீவிரக் கண்காணிப்பு மேற்கொள்ளும்படி ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. அவற்றைச் செயற்படுத்தவே இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.” – என்றார் அவர்.

அவரின் கருத்து – விளக்கம் – உண்மையாகவும் சரியாகவும் இருக்கலாம். ஆனால் இந்த விதிமுறைகளால் பெருமளவில் பாதிக்கப்படப் போகின்றவர்கள் நம்மவர்கள்தான்.

இந்தக் கெடுபிடி விதிமுறைகள் குறித்து யாரேனும் நீதிமன்றுக்குப் போனாலும் போகக்கூடும். வாதிடுவதற்கு காத்திரமான – சாதகமான – அம்சங்கள் இந்த விதிமுறைக்கு எதிராக உள்ளன. யாராவது செய்வார்களா? பார்ப்போம்.

– மின்னல் –

## இலங்கைப் பொறுப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐக்கிய நாடுகள் சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு, செலவுத்திட்டம் தொடர்பான விவாதம் நடைபெற்றுவரும் நிலையில், மனித உரிமைகள்சார் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படும் நிதியைக் குறைப்பதற்கு ரஷ்யா மற்றும் சீனா தலைமையிலான நாடுகளால் முன்னெடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகளுக்கு எதிரான உறுதியான நிலைப்பாட்டை உறுப்பு நாடுகள் வெளிப்படுத்தவேண்டும்.

ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின்கீழ் இயங்கும் நிதிச்சபையின் ஐந்தாவது குழு, ஐக்கிய நாடுகள் சபையின் வரவு, செலவுத்திட்டம் குறித்த கலந்துரையாடல்களில் ஈடுபடும்.

கடந்த வருடம் அக்கலந்துரையாடல்களில் பங்கேற்ற ஒருவரால் வழங்கப்பட்ட நம்பத்தகுந்த தகவல்களின் பிரகாரம், மனித உரிமைகளுடன் தொடர்புடைய குறித்த சில விவகாரங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியைக் குறைப்பதற்கான அழுத்தம் ரஷ்யா மற்றும் சீனாவினால் வழங்கப்பட்டதாக அறியமுடிகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள முக்கியமான சில விசாரணைப் பொறிமுறைகள் தற்போது நடைமுறையில் உள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகள், பெலாரஸில் இடம்பெற்ற மிக மோசமான மீறல்கள் குறித்த விசாரணைகள், இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் பற்றி விசாரணைகள் மற்றும் ஆபிரிக்கர்களுக்கு எதிராக சட்ட அமுலாக்க அதிகாரிகளால் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்த சர்வதேச நிபுணர்களின் விசாரணைப் பொறிமுறை என்பன அவற்றில் பிரதானமானவையாகும்.

ஐக்கிய நாடுகள் சபைக்கென ஒதுக்கப்படும் வளங்களில் மனித உரிமைகள் சார் விவகாரங்கள் அதிக பங்கைப் பெறுவதாக எவ்வித அடிப்படைகளுமற்ற வகையில் சீனா மற்றும் ரஷ்யாவினால் வெளியிடப்பட்ட கருத்தினால் அண்மைய வருடங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் வரவு, செலவுத்திட்டம் குறித்த கலந்துரையாடல்கள் சர்ச்சைக்குரியவையாக மாறியிருந்தன.

இவ்வருடம் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் பொறிமுறைக்காக ஒதுக்கப்படவுள்ள நிதி மற்றும் ஆளணியில் குறைப்பைச் செய்வதற்கு மேற்படி இரு பாதுகாப்புச்சபை உறுப்புநாடுகளும் இலங்கையும் தீவிரமாக முயற்சிக்கின்றன. அது மாத்திரமன்றி, பெலாரஸில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்த விசாரணைகளுக்கான நிதியொதுக்கீட்டிற்கு சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றன.

சுயாதீனமாக இயங்குவதாகக் கூறிக்கொள்கின்ற ஐக்கிய நாடுகள் சபைக்கான வரவு, செலவுத்திட்டத்தை மதிப்பீடுசெய்யும் குழு, மனித உரிமைகள்சார் செயற்பாடுகளுக்கான நிதிவழங்கலைக் குறைக்கக்கூடிய வகையிலான அரசியல் மயப்படுத்தப்பட்ட பரிந்துரைகளை வழங்குவதன் ஊடாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் செயற்திட்டங்களுக்கான நிதியைத் திரட்டும் முயற்சியில் பாதிப்பை ஏற்படுத்தி வருவது மிகுந்த விசனத்திற்குரிய விடயமாகும்.

ஆகவே மனித உரிமைகள்சார் செயற்திட்டங்களுக்கான நிதியொதுக்கீட்டைக் குறைப்பதற்கு சீனா மற்றும் ரஷ்யாவினால் வழங்கப்படும் அழுத்தத்தை ஏனைய உறுப்புநாடுகள் தோற்கடிக்கவேண்டியது அவசியம் என்பதுடன் அனைத்து மனித உரிமைகள்சார் பொறிமுறைகளுக்கும் முழுமையாக நிதியொதுக்கப்படுவதை உறுதிசெய்வது இன்றியமையாததாகும். – என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

## இந்திய மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடற்றொழிலாளர் சங்கத்தின் தெரிவு இடம்பெற்ற நிலையில் அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மயிலிட்டியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகுகளின் நிலையை நாம் பார்வையிட்டோம். இரணைதீவு மக்களின் போக்குவரத்து தேவைக்காக அண்மையில் இந்திய மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட படகொன்றை கையளிக்க உள்ளோம்.

இந்தியாவில் இருந்து அழுத்தங்கள் வந்தாலும் இந்திய மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட படகுகள் தற்போது அரசுடமையாக்கப்பட்டுள்ளது.

நாம் நல்லெண்ணத்தை காட்டி இந்திய மீனவர்களை விடுதலை செய்த பொழுதும் இலங்கை மீனவர்கள் இன்றும் இந்திய சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்திய அரசு நீதிமன்ற நடவடிக்கையைக் காரணம் காட்டி செயல்படும் பொழுது நாமும் நீதிமன்ற பொறிமுறை ஊடாகவே செல்ல முடியும். – எனத் தெரிவித்துள்ளார்.

## ஒரு இலட்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த 2020 ஆம் ஆண்டு 55 ஆயிரம் கோடி ரூபா வரி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என உத்தியோகபூர்வமாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டிலும் இதே அளவான தொகை வரி வருமானத்தை அரசு இழந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த வரிச் சலுகைகள் காரணமாக பதிவு செய்யப்பட்ட வரிச் செலுத்துவோரின் எண்ணிக்கை 42.2 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அத்துடன் பெறுமதி சேர் வரி (VAT) செலுத்தத் தம்மை பதிவு செய்திருந்த, 28 ஆயிரத்து 914 நிறுவனங்களில் 8 ஆயிரத்து 152 நிறுவனங்கள் வரி செலுத்துவதில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில், 2019 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டிருந்த 17 லட்சத்து 5 ஆயிரத்து 233 வரிச் செலுத்துவோரின் எண்ணிக்கையானது, 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 11 லட்சத்து 33 ஆயிரத்து 445 ஆக குறைந்துள்ளது.

இதற்கமைய 33.5 வீதமான வரி ஆவணங்கள் முற்றாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில், பஸில் ராஜபக்ஷ நிதியமைச்சராகப் பதவியேற்ற பின்னர், கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக மாற்றுவதற்கு வழி செய்யும் சட்டமூலத்தை கொண்டு வந்து நிறைவேற்றினார். இதன் மூலம் மேலும் பல வர்த்தகர்கள், முன்னர் தாம் மோசடியாக சம்பாதித்த பணத்தை சட்ட ரீதியான பணமாக மாற்றச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.



# குற்றச்சாட்டை நிரூபித்தால் நான் பதவி விலகத் தயார்!

## சவால் விடும் அமைச்சர் கெஹலிய

பயிற்சி பெறும் மருத்துவர்களுக்கு அழுத்தம் கொடுத்து தனக்கு தேவையான பட்டியலை தயாரித்தார் என சுமத்தப்படும் குற்றச்சாட்டை நிரூபித்தால், அமைச்சர் பதவியை இராஜினாமா செய்கிறேன் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

என் மீது பெரிய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்ததுடன் அது ஊடகங்களில் வெளியானது. அமைச்சர் பயிற்சி பெறும் மருத்துவர்களுக்கு அழுத்தம் கொடுத்து அமைச்சருக்குத் தேவையானவகையில் பட்டியலை தயாரித்தார் எனக் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அரசியல் தலையீட்டை செய்து, நான் இந்த பட்டியலைத் தயாரித்தேன் என நிருபித்தால், நான் மறுநாளே பதவி விலகி விடுவேன் என்று இரண்டாவது முறையாக நான் கூறுகிறேன்.

அரசியல்ரீதியான அழுத்தங்களைக் கொடுக்கும் பழக்கம் எனக்கில்லை. முன்னர் அமைச்சில் இருந்தவர்கள் அப்படிச் செய்திருக்கலாம், தற்போது அப்படி நடப்பதில்லை என மருத்துவச் சங்க உறுப்பினர்கள் கூறுகின்றனர்.

நான் முன்னரும் செய்தவனல்லன், இனியும் செய்யப் போபவனுமல்லன். நியாயமான அந்த நடவடிக்கைகளை மேற்கொள்வோமே அன்றி, அவற்றில் தலையிட்டு, எமக்குத் தேவையான வகையில் செய்யப் போவதில்லை.

நாடாளுமன்றத்தில் இருக்கும் எனது இரண்டு நண்பர்களின் பிள்ளைகள் மருத்துவர்களாக இருக்கின்றனர். அவர்கள் கோரிக்கை விடுத்த போதும், மன்னித்து விடுங்கள் செய்ய முடியாது என்று கூறிவிட்டேன்.

அமைச்சர்கள் இருப்பது இப்படியான வேலைகளை செய்வதற்காக அல்ல. நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் எடுக்கும் கொள்கை ரீதியான தீர்மானங்களை நடைமுறைப்படுத்தவே நாங்கள் இருக்கின்றோம்.



வேறு வேலைகளைச் செய்வதற்காக நாங்கள் அமைச்சர் பதவியை வகிக்கவில்லை. நியமனங்களையும் இடமாற்றங்களையும் செய்ய நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் குழு இருக்கின்றது.

அநீதிகள் ஏற்பட்டதாக எவரும் இதுவரை குற்றம் சுமத்தியதில்லை எனவும் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டுள்ளார்.

# 50 பொருளாதார கேந்திர மையங்களை விற்கத் தயாராகின்றது அரசாங்கம்!

## திஸ்ஸ அத்தநாயக்க தகவல்



நாட்டின் 50 முக்கிய பொருளாதார கேந்திர மையங்களை விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நகர அபிவிருத்தி அதிகாரசபையால் பகிரங்கமாக இதற்கான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

நாட்டிலுள்ள அனைத்து பொருளாதார கேந்திர மையங்களையும், பெறுமதி மிக்க சொத்துக்களையும் , இடங்களையும் விற்று பணத்தை சேமிப்பது எமது கொள்கை அல்ல. நிதி நெருக்கடிக்கு குறுகிய காலத்துக்குள் தீர்வு காண்பதற்கான ஒரே வழி சர்வதேச நாணய நிதியத்தை நாடுவது மாத்திரமேயாகும் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக் காட்டினார்.

நாட்டில் காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடி தொடர்பில் கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கட்டுப்பாடுகளின்றி அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரித்துச் செல்லுமாயின் அரசாங்கம் எதற்கு? நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை எதற்கு? பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் பேக்கரி உற்பத்திகளின் நிர்ணய விலையிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளது.

அவ்வாறெனில் அடுத்த ஆண்டு மத்தியில் பாண் இறாத்தல் ஒன்றின் விலை 200 ரூபா வரை அதிகரிக்கும். எரிபொருள் விலை உயர்வு முதற்கொண்டு எதனையும் கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது.

சுதந்திரமாக கருத்து தெரிவிப்பதற்கு மாத்திரம் அரசாங்கம் தெரிவு செய்யப்படவில்லை. வருமானம் ஈட்டும் அதே வேளை மக்களுக்கான நிவாரணத்தையும் வழங்க வேண்டும். இவை இரண்டையும் சமநிலையுடன் கையாள்வதே அரசாங்கத்தின் செயற்திறனாகும். அதனைவிடுத்து உலக சந்தையில் விலை அதிகரிப்பதால் உள்நாட்டிலும் விலை அதிகரிக்கிறது என்று கூறிக் கொண்டிருப்பது செயற்திறனாகாது.

டொலர் மற்றும் நிதி நெருக்கடி என்பவற்றோடு கொவிட் அச்சுறுத்தல் என மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி உள்ளிட்ட முழு அரசாங்கமும் மக்களுடன் இருக்க வேண்டும்.

வேறு நாடுகளில் இவ்வாறான நிலைமை ஏற்பட்டிருந்தால் மக்களிடம் மன்னிப்பு கோரி அரசாங்கம் பதவி விலகியிருக்கும். ஆனால் இந்நாட்டில் நிதி அமைச்சர் உள்ளிட்ட முக்கிய அமைச்சர்கள் நாட்டிலிருந்து வெளியேறி வெளிநாடுகளுக்கு சுற்றுலா செல்கின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிக்கு குறுகியகால, நீண்டகால மற்றும் மத்தியகால தீர்வுகள் காணப்படுகின்றன. இதில் துரிதமாக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை டொலர் நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதாகும்.

ஆனால் அரசாங்கம் அதிக வட்டிக்கு கடன் வழங்கக் கூடிய தொழிலதிபர்களையே நாடுகிறது. இதன் மூலம் தேசிய சொத்துக்களை விற்று பண மோசடியில் ஈடுபட முடியும் என்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

தற்போது நாட்டின் 50 முக்கிய பொருளாதார கேந்திர மையங்களை விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் பகிரங்கமாக இதற்கான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள அனைத்து பொருளாதார கேந்திர மையங்களையும், பெறுமதி மிக்க சொத்துக்களையும் , இடங்களையும் விற்று பணத்தை சேமிப்பது எமது கொள்கை அல்ல. எனவே நெருக்கடிக்கு குறுகிய காலத்திற்குள் தீர்வு காண்பதற்கான ஒரே வழி சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதாகும்.

நாட்டில் நிதி ஒழுக்கத்தை ஏற்படுத்துவதற்கு சர்வதேச நாணய நிதியத்தினால் நிபந்தனைகள் விதிக்கப்படும். இலங்கையில் நிதி ஒழுக்கம் முறையாக பின்பற்றப்படாமையின் காரணமாகவே இந்த பிரச்சினைகள் அனைத்தும் தோற்றம் பெற்றன. – என்றார்.

### 60 வயதுக்கும் மேற்பட்ட 50 ஆயிரம் பேர் தடுப்பூசி பெறவில்லை!

60 வயதுக்கும் மேற்பட்ட சுமார் 50 ஆயிரம் பேர் எந்த விதமான கொவிட் தடுப்பூசியையும் பெற்றுக்கொள்ளவில்லை என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்க மருத்துவ அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இதனை அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் துணைச்செயலாளர் நவின் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

கொவிட் தொற்றால் உயிரிழப்போரில் பெரும்பான்மையானவர்கள் வயது முதிர்ந்தவர்கள் என்பதால் கட்டாயமாக முதலாம், இரண்டாம் மற்றும் பூஸ்டர் தடுப்பூசிகளை இந்த வயதுப் பிரிவினர் எடுத்துக்கொள்ள வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## வருகின்றது மின்வெட்டு

'பட்ட காலிலேயே படும், கெட்ட குடியே கெடும்' என்பார்கள். பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடிகளையும் பின்னடைவுகளையும் எதிர்நோக்கியிருக்கும் இலங்கை மக்களை மற்றொரு பெரும் நெருக்கடி புத்தாண்டில் தாக்கவிருப்பது குறித்துச் செய்திகளை வெளியாகியுள்ளன.

'மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக' விலை அதிகரிப்புகளினாலும், பொருளாதார நெருக்கடிகளினாலும் துவண்டு போய் கிடக்கும் இலங்கை மக்களை மின்வெட்டு இக்கட்டும் விரைவில் பீடிக்கப்போவதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. புத்தாண்டு தரும் எச்சரிக்கைச் செய்திகளில் இது மிகவும் முக்கியமானது.

திடீர் எரிபொருள் விலை அதிகரிப்பினால் எல்லா விடயங்களிலும் செலவினம் எகிறியுள்ளது. போக்குவரத்துக் கட்டணங்களில் இருந்து அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வரை எல்லாம் விலையுயர்ந்துள்ளன. கட்டணங்கள் அதிகரித்துள்ளன. அப்பாவி மக்கள் மலைத்துப் போயிருக்கின்றனர். இதன் பின் மின்வெட்டும் வருமானால் அதன் தொடர் பாதிப்புகள் மிக மோசமானவையாக இருக்கும்.

இந்த எரிபொருள் விலை அதிகரிப்பு இப்போதைக்கான ஏற்பாடுதானாம். மீண்டும் ஒரு விலை அதிகரிப்பு புத்தாண்டுடன் – அடுத்த வாரம் கழித்து – வரக் கூடும் என எச்சரிக்கைத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சரியோ, பிழையோ முன்னைய ராஜபக்ஷக்களின் அரசில் எகிறியிருந்த எரிபொருள்களின் விலையைக் கணிசமாகக் குறைத்து, அந்த விலையை இரண்டு, மூன்று வருடங்களுக்கு மாற்றாமல் பேணியது நல்லாட்சி அரசு. அதற்குப் பின்னரும் கூட, அப்போது நிதி அமைச்சராக இருந்த மங்கள சமரவீர எரிபொருள் விலையைத் தீர்மானிப்பதற்கான சூத்திரம் ஒன்றை வெளியிட்டார். அதன் பிரகாரம் மாதாந்தம் எரிபொருள் விலையைத் தீர்மானிக்கும் முறைமையையும் அவர் அறிமுகப்படுத்தினார். அதன்படி மாதந்தோறும் எரிபொருள் விலை மாறும். எரிபொருள் விலைச் சூத்திரன்படி சில சமயங்களில் விலை கூடும். சில சமயங்களில் குறையும். மாறாமலும் இருக்கும். அப்போது எதிரணியில் இருந்த பொதுஜன பெரமுனவினர் அந்த எரிபொருள் விலை நிர்ணய சூத்திரத்தைக் கடுமையாக எதிர்த்தனர். அது நாட்டுக்குப் பொருத்தமற்றது என்றனர்.

கோட்டாபய ராஜபக்ஷ அரசு அதிகாரத்துக்கு வந்ததும் முதல் செய்த பணிகளில் ஒன்று, எரிபொருள் விலைச் சூத்திரமுறை மையை அகற்றியதுதான்.

இப்போது எரிபொருள் விலை உயர்வை அடுத்து மக்கள் எதிர்ப்பு – கிளர்ச்சி – அதிருப்தி – அரசுக்கு எதிராக எழுந்துள்ளமையை அடுத்து, அந்த எரிபொருள் விலைச் சூத்திரமுறைமையைப் பேணியிருந்தால் – தக்க வைத்திருந்தால் – எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என அமைச்சரவைப் பேச்சாளர் டலஸ் அழகப்பெரும் சப்பைக்கட்டு கட்டுகின்றார்.

எரிபொருள் விலையேற்றத்தால் நாடும், அரசும், மக்களும், குழம்பிப் போயிருக்கும் நேரத்தில் புத்தாண்டில் மின்வெட்டு தவிர்க்க முடியாததாக இருக்கும் என்ற ஆபத்து எச்சரிக்கையுடன் இலங்கை மின்சார சபை வருகின்றது.

மின் உற்பத்திக்குத் தேவையான எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கு அந்நிய செலாவணி இன்றி அல்லாடுகின்றது அரசு. இலங்கை மின்சார சபையிடம் கையிருப்பில் இருக்கும் எரிபொருளின் அளவும் வற்றி வருகின்றது.

அதனால் பிறக்கும் புத்தாண்டில் மின்வெட்டை நடைமுறைப்படுத்துவது தவிர்க்க முடியாத கட்டாயமாக இருக்கும் என்று மின்சார சபை கூறுகின்றது.

ஏற்கனவே மின் உற்பத்தி நிலையங்கள் சில பழுதடைந்து தேசிய உற்பத்தி வலையமைப்பிலிருந்து விலகி நிற்கும் இக்கட்டு உள்ளது. அதன் காரணமாக சுழற்சி முறையில் மின்வெட்டை நடைமுறைப்படுத்த வேண்டிய நெருக்கடி புத்தாண்டில் தவிர்க்க முடியாததாக இருக்கும் எனக் கூறப்பட்டு வந்தது.

இப்போது அது உறுதியாகியிருப்பதுதான் பிந்திய செய்தி. பாவம் இலங்கை மக்கள்.

# மகளை ஏமாற்றிய நபரை அடித்துக்கொன்ற தந்தை



பதுளை – ஒலியமண்டிய பிரதேசத்தில் பித்தளைப் பாத்திரங்களால் தாக்கப்பட்டு ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

முதல் திருமணத்தில் இரண்டு பிள்ளைகள் இருந்த நிலையில், மேற்படி 25 வயதுடைய நபர் கடந்த சில நாள்களுக்கு முன்னர் 21 வயதுடைய இளம்பெண் ஒருவரை திருமணம் செய்துள்ளார்.

முதல் திருமணம் செய்த மனைவி கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட தரப்பினரை பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்து சமரசம் செய்து வைத்துள்ளனர்.

இரண்டாவது மனைவியின் தந்தை, குறித்த நபரையும் மகளையும் வானில் ஏற்றி தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளமையுடன், அங்கு ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்து இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்த தாக்குதலில் மேற்படி நபர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக இரண்டாவது மனைவியின் தந்தை, தாய் மற்றும் அவரது இளைய சகோதரர் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# கேற்றில் சிக்குண்டு 3 வயது சிறுமி சாவு



வீட்டின் கேற் விழுந்ததில் 3 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தொடம்கஸ்லந்த, தெலம்புகல்ல பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் மொஹமட் இர்ஷாத் மரியம் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சிறுமியும் அவரது உறவினரான நான்கு வயது பிள்ளையும் கேற் அருகே விளையாடிக் கொண்டிருந்த போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அவர்கள் கேற்றில் தொங்கியுள்ளனர் என உயிரிழந்த சிறுமியின் உறவினர் ஒருவர் தெரிவித்தார்.

இதன்போது, கேற் அவர்கள் மீது விழுந்துள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது உயிரிழந்துள்ளமையுடன் மற்றைய பிள்ளை பலத்த காயங்களுடன் குருநாகல் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படும் பணத்தின் அளவிலும் வீழ்ச்சியாம்!

## மத்திய வங்கி அறிவிப்பு

வெளிநாடுகளிலிருந்து அனுப்பி வைக்கப்படும் பணத்தின் அளவில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது என மத்திய வங்கித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெளிநாடுகளில் பணியாற்றி வரும் இலங்கையர்களால் மாதாந்தம் அனுப்பி வைக்கப்படும் டொலர் தொகையில் பாரிய வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

குறிப்பாக கடந்த செப்ரெம்பர், ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட தொகை 30 முதல் 50 வீதத்தால் வீழ்ச்சி அடைந்துள்ளது.

உண்டியல் வர்த்தகர்கள் டொலருக்கு கூடுதல் தொகையை வழங்குவதால் இவ்வாறு சட்ட ரீதியான வழிமுறைகளில் நாட்டுக்கு பணம் அனுப்புவது குறைந்துள்ளது.

இவ்வாறு உண்டியல் முறையில் பணம் அனுப்பி வைப்பதைத் தடுக்கும் வகையில் புதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் காரணமாக இந்த டிசெம்பர் மாதத்தில் டொலர் வருமானம் உயர்வடைந்துள்ளது என மத்திய வங்கித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# முன்னாள் அமைச்சரவை அமைச்சர் குணரத்ன வீரக்கோன் காலமானார்!

*முன்னாள் அமைச்சரவை அமைச்சரும், கரந்தெனிய தேர்தல் தொகுதியின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பிரதான அமைப்பாளருமான குணரத்ன வீரகோன் கடந்த வெள்ளிக்கிழமை இரவு காலமானார்.*

*இறக்கும் போது 74 வயதான அவரது உடல் கொழும்பில் உள்ள தனியார் மலர்சாலையில் வைக்கப்பட்டிருந்து இறுதிக் கிரியைகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.*



காலைக்கதிர் Kalaikkathir

# திருமலை, மட்டு மாவட்ட அரச உத்தியோகத்தர்களின் போக்குவரத்து பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கோரல்




திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாண அமைச்சு மற்றும் பல்வேறு திணைக்களங்களில் கடமையாற்றும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அரச உத்தியோகத்தர்கள் தங்களது போக்குவரத்து பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர். இது தொடர்பில் அரச உத்தியோகத்தர்கள் தெரிவிப்பவை வருமாறு -

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ளஅரசஉத்தியோகத்தர்களை உரிய நேரத்துக்கு திருகோணமலைக்கு ஏற்றிச் செல்லும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான மட்டக்களப்பு - திருகோணமலை பஸ் சேவை தினமும் அதிகாலை 5.45 மணிக்கு மட்டக்களப்பிலிருந்தும், மாலை 4.30 மணிக்கு திருகோணமலையிலிருந்தும் இந்தச் சேவை இடம்பெறுகின்றன.

ஆனால் இந்த பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து, மாதத்தில் மூன்று நாள்கள் இடைநடுவில் பழுதடைந்தும், டயர் காற்றுப்போகும் நிலைமையே காணப்படுவதாகவும், இதனால் உரிய நேரத்துக்கு தங்களின் அலுவலக கடமைக்குச் செல்ல முடியாதுள்ளதாகவும், அன்றைய தினம் அரைநாள் விடுமுறையாகவும் செல்கின்றது என அதில் பயணிக்கும் அரச உத்தியோகத்தர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் பல தடவைகள் உரிய அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தும் இதுவரை எந்த நடவடிக்கைகளையும் அவர்கள் எடுக்கவில்லை என்றும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதில் பயணிக்கும் அனைத்து உத்தியோகத்தர்களும் திருகோணமலையில் உள்ள கல்வியமைச்சு, சுகாதார அமைச்சு, விவசாய அமைச்சு, பிரதிப் பிரதம செயலாளர் செயலகம், சுகாதாரத் திணைக்களம், கட்டடங்கள் திணைக்களம், பொதுச் சுகாதார சேவைகள் அலுவலகம், உள்ளூராட்சித் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி சபைகள், கூட்டுறவு திணைக்களம், தபால் திணைக்களம், மோட்டார் போக்குவரத்து திணைக்களம், நீர்ப் பாசனத் திணைக்களம், மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை உள்ளிட்ட பல்வேறு அரச நிறுவனங்களில் கடமையாற்றுகின்றவர்களாவர்.

இந்தப் பிரச்சினை அடிக்கடி இடம்பெறுகின்றமையால் இடைநடுவில் வேறு பஸ்ஸில் பயணிக்கவேண்டிய ஒரு சங்கடமான சூழ்நிலைமைக்கு ஆளாக வேண்டியுள்ளதுடன் தேவையற்ற செலவீனங்களும் ஏற்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வை வழங்குவதற்கான நடவடிக்கையை உரிய அதிகாரிகள் உடனடியாக பிரச்சினையை தீர்த்து வைக்க முன்வரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மட்டக்களப்பு கிராமத்துக்குள் புகுந்தது இராட்சத முதலை!

### வீதியில் மக்கள்

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கதிர்காமர் வீதி கிராமத்துக்குள் புகுந்த முதலையொன்றைப் பொதுமக்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

மட்டிக்களி - கதிர்காமர் வீதியில் கடந்த சனிக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் உலாவிய குறித்த முதலையைக் கண்ட அப்பகுதி மக்கள் பொலிஸாருக்கு, வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கும் தகவல் வழங்கியுள்ளனர்.

இதனைத்தொடர்ந்து மேற்படி இடத்துக்கு வருகை தந்த கல்லடி வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறித்த முதலையைப் பாதுகாப்பாக மீட்டு செங்கலடி கறுத்த பாலத்துக்கு அருகிலுள்ள குளம் ஒன்றில் விடுவித்தனர் எனத் திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

சுமார் 07 அடி நீளத்தைக் கொண்ட மேற்படி முதலை குறித்த கிராமத்துக்கு அருகிலுள்ள தோணா (நீர்நிலை) பகுதியிலிருந்து வந்திருக்கலாமென அப்பகுதி மக்கள் தெரிவித்தமையுடன், அப்பகுதியைச் சேர்ந்த பெருமளவிலான மக்கள் அதனைப் பார்வையிடுவதற்காக வருகை தந்திருந்ததுடன், அப்பகுதியில் அச்சநிலையும் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





## வடக்கு மாகாண வைத்தியசாலைகளுக்கு வைத்திய உத்தியோகத்தர்கள் நியமனம்

வடமாகாண வைத்தியசாலைகளில் பணியாற்ற மேலும் 54 வைத்தியர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றனர் என மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

மத்திய சுகாதார அமைச்சால் உள்ளகப் பயிற்சியை நிறைவு செய்த வைத்திய அதிகாரிகளுக்குக் கடந்த 23 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் புதிய நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந்த நியமனத்தில் வடமாகாணத்துக்குப் புதிதாக 54 மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 15 பேர் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட வைத்தியசாலைகளுக்கும், 14 பேர் மன்னார் மாவட்ட வைத்தியசாலைகளுக்கும், 10 பேர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைகளுக்கும், 8 பேர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைகளுக்கும், 7 பேர் வவுனியா மாவட்ட வைத்தியசாலைகளுக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக மேலும் 6 மருத்துவ அதிகாரிகள் யாழ். போதனா வைத்தியசாலைக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.



கடந்த ஒக்ரோபர் மாதம் மத்திய சுகாதார அமைச்சால் புதிதாக வழங்கப்பட்ட மருத்துவ அதிகாரிகளின் நியமனத்தின்போது வடமாகாணத்துக்கு 188 மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வங்கிகள் பலவீனமான நிலையில் இலங்கை அதலபாதாளத்தில்!

### கலாநிதி ஹர்ஷ டி சில்வா வேதனை

நாட்டின் தற்போதைய அரசாங்கம் தற்பெருமையில், நிபுணர்கள் வழங்கிய ஆலோசனைகளை கவனத்தில் கொள்ளாது செயற்பட்டதன் காரணமாக நாட்டை முற்றாக அதலபாதாளத்திற்குள் தள்ளியுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், பொருளாதார நிபுணரான ஹர்ஷ டி சில்வா இதனைக் கூறியுள்ளார்.

வங்கிகள் மிகவும் பலவீனமான நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளன. எங்கிருந்தும் டொலர்களைப் பெற முடியாத காரணத்தால், கைமாற்றாக நாடுகளிடம் இருந்து டொலர்களைப் பெறுகின்றனர்.

40 வீதம் முதல் 45 வீத வட்டியில் டொலர்களைப் பெறுகின்றனர். புள்ளிவிவரங்களை சமப்படுத்துவதற்காக மக்களுக்கு கடும் தொந்தரவுகளைக் கொடுத்து எதிர்வரும் 31 ஆம் திகதி வரை டொலரின் விலையை 200 ரூபா என்ற நிலையில் வைத்திருக்கின்றனர்.

ரூபாவை மிதக்க விட்டால், டொலர் ஒன்றின் விலை 230 ரூபா முதல் 240 வரை அதிகரித்து, அரசாங்கத்தின் அனைத்து பொருளாதார நகர்வுகளும் தவறான திசை நோக்கி நகரும்.

பொருளாதார வளர்ச்சி வேகம், பணவீக்கம், மொத்த தேசிய உற்பத்திக்கு நிகரான கடன் என அனைத்தும் வீழ்ச்சியை நோக்கிச் செல்லும். சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதா, இல்லையா என்று ஜனவரி 3 ஆம் திகதி கலந்துரையாடவுள்ளனர்.



அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை 13 மாதங்களுக்கு முன்னர் எடுத்திருக்க வேண்டும். அரசாங்கம் எந்த வகையிலும் பொருளாதார நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெறவில்லை. கமத்தொழில், சுகாதாரம், பொருளாதாரம் என அனைத்துத் துறைகளிலும் இதே நிலைமை.

தமது தற்பெருமைக்காக, தமக்கு அனைத்தும் தெரியும், நாங்களே நன்றாக செய்தோம் எனக் கூறி, முழு நாட்டை அதலபாதாளத்திற்குள் தள்ளியுள்ளனர். தயவு செய்து தற்போதாவது நிபுணர்களின் ஆலோசனைக்கு அமைய பணியாற்றுங்கள் என ஹர்ஷ டி சில்வா அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

## இலங்கைக்கு விஜயம்செய்த நாணய நிதிய அதிகாரிகள்!

சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழு ஒன்று அண்மையில் கொழும்புக்கு விஜயம் செய்திருந்த போதிலும் அரசாங்கம், அந்த நிறுவனத்திடம் நிதியுதவிகளைக் கோரவில்லை எனத் தெரியவருகிறது. இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்ததால், மாற்று வழிகள் பற்றி பேச்சு நடத்தத் தயாராக இருக்கிறோம் என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவின் தலைமை அதிகாரி மசஹிரோ நோசாகி தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழு ஒன்று மாநாடு ஒன்றில் கலந்துகொள்வதற்காக இலங்கை வந்திருந்ததாகவும் அந்த அதிகாரிகள் கடந்த 7 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கி இருந்தனர் எனவும் கூறப்படுகிறது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 233

### 601.இந்த 13ஆம் திருத்தம், அதற்கு மேல் இல்லை, அதுதான் என்றெல்லாம் குழப்புகிறார்களே இதன் சூட்சுமங்கள் என்ன?

நாடுகளும், மனிதர்களைப் போல் சில தனிப்பட்ட குண இயல்புகளில்தான் இயங்குகின்றன. தங்களுக்கு ஏற்படும் அவமானங்களை, இழப்புகளை நாடுகளும் மனிதர்கள் போல் நினைவில் வைத்து அதன் அடிப்படையில்தான் மேற்கொள்ள வேண்டியவற்றை ஆராய்வார்கள்.

அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், சீனா,



இந்தியா ஒவ்வொன்றினதும் குணவியல்பு நாடு என்றளவில் வேறுபாடு கொண்டது.

இந்தியப்படைகளைதிரும்பி போகும்படி விடுதலைப் புலிகள் நிர்பந்தித்தது, தமிழ் மக்களது கோரிக்கையாக பார்க்கப்பட்டது. பின் இந்த கோரிக்கை ஸ்ரீலங்கா அரசுடன் சேர்ந்து வைக்கப்பட்டதை தமக்கு நேர்ந்த அவமானமாக இந்தியா கருதியது. எந்த அரசாங்கமென்றாலென்ன, யார் பிரதம மந்திரியாக இருந்தாலென்ன, இந்தியா ஒரு நாடாக அதனை அதற்கு நேர்ந்த செருப்படியாகத்தான் பார்த்தது. அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன், இந்திரா காந்தியை நடத்திய விதமும், தாங்கள் உடைத்து நொறுக்க முடியாத 500 ஜெட் போர் விமானங்களை பாகிஸ்தானுக்கு உதவியாக தருகிறோம், நொறுக்கிப் பாருங்கள், அப்படி சில விமானங்கள் வாங்க உங்களிடம் வசதி இருந்தால் பேசிப் பாருங்கள் என கொக்கரித்த போது, இந்தியா திரும்பிய பிரதமர் இந்திரா காந்தி அழைத்து பேசியது (பின்னாளில் பிரதமரான) எதிர்க்கட்சியிலிருந்த வாஜ்பாயைதான். இந்திரா காந்தியை கடுமையாக விமர்சனம் செய்தவர் அவர். நாட்டுக்காக அவர் ஐ.நாவில் இந்தியப் பிரதிநிதிப் பதவியை ஏற்றார். அங்கு அவர் ஆற்றிய உரைகள் பிரசித்தமானவை.

இதனைத்தான் பின் பிரதமர் வி.பி.சிங் இந்தியப் படைகளை வெளியேற்ற உத்தரவு தந்து, ராஜீவின் கொள்கைகள் பிழையானவை என வி.பி.சிங் கண்டித்தாலும், பின்னர் பாலசிங்கம், கருணாநிதியின் அனுசரணையில் இந்தியப் படைகளை முழுவதும் வெளியேற்ற வேண்டாம், பகுதி பகுதியாக திரும்ப எடுத்துக் கொள்ளுங்கள் எனக் கேட்டதை மறுத்துவிட்டார். அவர் சொன்ன பதில் 'நீங்கள் கேட்கும் படியெல்லாம் செய்வதற்கு முடியாது. வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நிர்பந்தித்தீர்கள். அதுவும் ஸ்ரீலங்கா அரசுடன் சேர்ந்து. அதைச் செய்கிறோம். எப்படி செய்வது என்பது எங்களைப் பொறுத்தது.' – என்பதுதான்.

'நீங்கள் மாகாண சபையை எப்படி நடத்துவது என ஈ.பி.ஆர். எல்.எவ்வுடன் சேர்ந்து பேசி பிரேமதாஸாவின் அனுசரணையில் முன்னெடுங்கள். தமிழ் பரப்புக்களை ஒற்றுமையாகப் பேசி இதனை நடத்த கருணாநிதியை கேட்டுக்கொள்கிறேன்.' – எனக் கூறிவிட்டார்.

இந்தியா வெளியேற வேண்டும் என்ற நிர்ப்பந்தங்கள் ஆரம்பமாகிய வேளைகளில் வெளிநாட்டு அமைச்சராக இருந்தவர் நரசிம்ம ராவ். அவர் சிறுதொகை இந்திய இராணுவத்தை ஸ்ரீலங்காவுக்குள் வைத்துக் கொண்டு, பெரும் பகுதியை திரும்பப்பெற எவ்வளவோ முயற்சிகள் தமிழ் பரப்புக்கள் மூலமும் எடுத்தமையும், அதற்கு விடுதலைப் புலிகள் இணங்காமல் போகவே, அவர் "இந்தியா ஒரு சுண்டைக்காய் நாடல்ல, வாருங்கள் என்று கூப்பிட்டவுடன் ஓடி வந்து விடுவதற்கும், போ என்று சொன்னால் போய் வருவதற்கும். தமிழ் மக்கள் இன்று செய்யும் முட்டாள்தனங்களுக்குப் பின்னர் வருந்துவார்கள்" என கூறியதன் பலாபலன்கள்தான் இன்று நடப்பன.

அதற்கும் மேல் போய் அவர்களது பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டு, அதனைச் செய்தார்களோ, இல்லையோ பழியும் விடுதலைப் புலிகள் மீதும் தமிழ் மக்கள் மீதும் போடப்பட்டது.

பிணக்குகளோடு இருக்கும் ஒரு தாய் மாமனை கல்யாணத்திற்கு அழைக்க, கேட்க, இடைப்பகுதியிடம் அவர் "வேண்டுமானால்படியேறிவந்துகேட்டுபிணக்கை தீர்த்து வெற்றிலை வைக்க சொல்லுங்கள் பார்க்கலாம்" என்பதும், அந்த வெற்றிலை அழைப்பை ஏற்று வருவதாக மாமன் சொல்லவும் பந்தங்கள், விளக்குகள் கொண்டு அலைவதும் எத்தனை குடும்பங்களில் நடந்திருக்கின்றன?

அப்படியான மனோபாவம் நாடுகளிடையேயும் உண்டு. அது பஸிலுக்கு நடந்தது. அதன் பின் இரண்டு வருடத்திற்கும்மேலாக இழுபறியில் இருந்த அழைப்பு கூட்டமைப்புக்கு தெரியப்பட்டது.

அவர்கள் வந்து பேசி, பிணக்குகளை நீக்கி அழைக்கட்டும், அதன் பிறகு ஸ்ரீலங்காவுடன் தமிழர் தரப்புக்கான நிபந்தனைகளை வைக்கலாம் என்ற நோக்கங்களும் இருக்கலாம்.

13ஆம் திருத்த சட்டத்தை கூட்டமைப்பு ஏற்கவில்லை. இதனை ஏற்படுத்தியது இந்தியா தான். அவர்கள் விரும்பினால் அவர்களே அதை அமுல்படுத்தட்டும் என சம்பந்தன் சொல்கிறார்.தாய் மாமன் மிடுக்கை கவனித்துச் சொல்கிறாரா அல்லது கடந்த 12வருடங்களில் கூறியது போல தீர்வாக ஒரு புதிய அரசியல் யாப்பை ஏற்படுத்தி தருவேன், ஆதலால் 13ஆம் திருத்தத்தை இன்றைய சூழலில் தமிழ் மக்கள் இந்தியாவிடம் போய் கேட்க வேண்டியதில்லை என்ற கொள்கை நிதர்சனமானது என ஆணித்தரப்படுத்துகிறாரா என்பதும் நாளடைவில்தான் தெரியும். இவை 13ஆவது திருத்தம், அதனைக் கூட்டியும் குறைத்தும் என்பவை மனித இயல்புகளின் வெளிப்படா எனப் பார்க்கலாம்.


### 602.13ஆம் திருத்தத்தின் பின்னணி என்ன?இந்தியா ஏன் அப்படியாக இணங்கியது?

இலங்கை – இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட பொழுது "தர்மிஷ்டர்" ஜே.ஆர். பதவியிலிருந்தார். சர்வஅதிகாரமும் பொருந்திய ஜனாதிபதியாக ஸ்ரீலங்காவை அமெரிக்காவோடு இணைந்த அனுசரணையில் மேலைத்தேய நாடுகளின் கூட்டுறவில் வைத்திருந்தார்.

1977 தேர்தலின் போது தமிழ் மக்களுக்கு காணி, கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு, வாழ்வாதாரங்கள் பற்றியெல்லாம் குறைபாடுகள் உண்டு, தான் பதவிக்கு வந்தவுடன் சர்வகட்சி கூட்டமொன்றை ஏற்படுத்தி அவற்றுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணங்கி தீர்வுக்கு வருவேன் எனத் தனது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தெரிவித்திருந்தார்.

அவரது ஆட்சியில் 1977 இன் அட்டூழியங்கள், பயங்கரவாத தடைச்சட்டம், வட பகுதியின் மேலான ஆக்கிரமிப்புக்கள் நடத்தப்பெற்று 1983 இன் அட்டூழியங்களும் ஒப்பேற்றப்பட்டன.

ஸ்ரீலங்காவை எந்த வல்லரசின் ஆதிக்கத்துக்கும் உட்படவைக்காது, அதனால் தங்களுக்கு வரக்கூடிய பாதிப்புக்களை கணித்தும் தமிழர் சம்பந்தப்பட்ட கரிசனங்களாலும் (லட்சத்துக்கும் மேற்பட்ட அகதிகள் தமிழ் நாட்டில் தஞ்சம் அடைந்திருந்தனர்)இந்தியா தீர்வுக்கான முயற்சிகள் எடுத்தது. அதனைத் தொடர்ந்து இந்தியா ஏற்படுத்திய பல சர்வகட்சி கூட்டங்கள் எல்லாவற்றிலும் வைக்கப்பட்ட தீர்வு, தீர்மானங்கள் எல்லாமே ஜே. ஆரின் நஞ்சூட்டப்பட்ட நடவடிக்கைகளால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஏகோபித்து எல்லாக் கட்சிகளும் ஏற்றுக்கொண்ட ஒரே ஒரு தீர்மானம் சௌமியமூர்த்தி தொண்டமானினால் சமர்ப்பிக்கப்பட்ட எஞ்சியுள்ள இந்தியா வம்சாவழியினருக்கு பிரஜாவுரிமை வழங்குவது என்பது தான். அந்த அரசியல் செயல்பாட்டில் தான் பிரதிநிதித்துவப்படுத்திய இந்திய வம்சாவழி மக்களுக்கு வெற்றியீட்டி அது பின்னர் ஒப்பந்தத்திலும் ஒரு சரத்தானது.



இதனை ஏற்றுக் கொண்டதற்கு ஜே.ஆர்., பிரேமதாஸ, லலித் அத்துலத்முதலி, காமினி திஸநாயக்க போன்றவர்களின் மன ஓட்டம் இதனால் "இந்தியத் தமிழர்" என்று இந்தியா தமது மக்கள் என இனி ஸ்ரீலங்கா விடயத்தில் தலை நுழைக்கக் காரணம் இருக்காது என்பதே.

ஆக சர்வகட்சி கூட்டங்களில் சிங்களக் கட்சிகள் ஜே.ஆரின் தலைமையில் ஸ்ரீலங்கா முழுவதும் ஒரு நாடு, சிங்களவர்களுக்கே உரித்தான நாடு, அதனையும் அதன் உரிமைகளையும் அதிகாரங்களையும் பல வழிகளில் இழந்தது பிரித்தானியாவில் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் தான், ஆகவே சுதந்திரம் தங்களது நாட்டுக்கு வந்த போது சிங்கள மக்களே அதற்கு அருகதையானார்கள் என்று வளர்க்கப்பட்ட பெரும்பான்மைத் திமிரில் அதிகாரங்கள் யாவும் தங்களது கைகளில், அவர்களது கட்டுப்பாட்டில், ஒற்றையாட்சி அடிப்படையில் தங்களது பலப்புக்கு இருக்க வேண்டும், அதற்கு மத்தியில் மற்ற சமூகத்தினர் இணக்கமாக வாழலாம், ஆனால் அதன் எப்பகுதியும் தங்களது எனக் கோருவதும், அதனை தங்களது ஆட்சியின் கீழ் வைக்க விரும்புவதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்ற நிலைப்பாடுகள் அமெரிக்காவின் பின்னணியில் கூறப்பட்டன.

இந்தச் சிங்கள பெரும்பான்மைத் திமிரை ஜே.ஆர். ஜனாதிபதியாக அமெரிக்காவோடு இணைந்து செயல்பட விரும்புகின்ற போது உடைக்க முடியாது என்று உணர்ந்த இந்திரா காந்தி, ஸ்ரீலங்கா பலமான பாடம் ஒன்றை கற்றுக்கொள்ள வேண்டும் என தானெடுத்த சாம, பேத, தானவழிகளெல்லாம் பயனற்றுபோகவே, தண்டத்தை கையிலெடுத்தார்.

அதனை ஒப்பேற்றுவதற்குள் காலன் அவரைக் கவர்ந்ததால் ராஜீவ் காந்தியின் அரசு புதிய சவால்களை மேலைத்தேய கூட்டணியுடன் இயங்கிய ஸ்ரீலங்காவுடன் சமாளிக்க வேண்டியிருந்தது.

அந்தப் பின்னணியில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆயுதப்போராட்ட விடுதலைக் குழுக்களையும் உள்ளடக்கிய பேச்சுகளின் மேல் தான் 1987இல் வான் பரப்பில் அத்துமீறி உள்ளிட்ட தண்டத்தின் பின், ஒப்பந்தத்தில் வேறு வழியின்றி ஜே.ஆர். கைச்சாத்து வைத்தார்.

(வளரும்)



இந்திரா — நிக்ஸன்சந்திப்பு



## சுனாமி ஆழிப்பேரலையில் உயிரிழந்த உறவுகளுக்கு மலையகத்தில் அஞ்சலி!

சுனாமி ஆழிப்பேரலை இடம்பெற்று நேற்றுடன் 17 ஆண்டுகள் நிறைவடைவதை நினைவு கூரும் வகையில் உயிரிழந்த உறவுகளுக்கு மலையக மக்கள் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

அதன்படி, ஹற்றன் பொலிஸார், நகர வர்த்தகர்கள் மற்றும் பொது மக்களின் ஏற்பாட்டில் ஹற்றன் மணிக்கூண்டு கோபுரத்துக்கு அருகில் உள்ள புத்தர் சிலைக்கு முன்னால் இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வுகளில் ஹற்றன் நகரில் உள்ள வங்கி ஊழியர்கள், நகர வர்த்தகர்கள், சாரதிகள் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் என அனைவரும் கலந்துகொண்டனர்.

## ஜனாதிபதியின் செயலருக்கு நிதி அமைச்சில் உயர் பதவி?

ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தரவிற்கு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உயர் பதவியொன்றை வழங்க உள்ளார்.

எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் இவ்வாறு நிதி அமைச்சில் அதி உயர் பதவியொன்று வழங்கப்பட உள்ளது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் பதவியொன்றை பீ.பி. ஜயசுந்தரவிற்கு வழங்க உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பீ.பி.ஜயசுந்தர ஏற்கனவே தனது இராஜினாமா கடிதத்தை வழங்கியுள்ளார் எனத் தெற்கு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## பதவி விலகுவதற்கு அனுமதியுங்கள் ஜனாதிபதிக்கு ஜயசுந்தர கடிதம்

ஜனாதிபதியின் செயலாளர் பதவியில் இருந்து தம்மை விடுவிக்குமாறு கோரி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பி.பீ.ஜயசுந்தர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது பதவிக்காலத்தில் தான் எதிர்கொண்ட பிரச்சினைகள் மற்றும் சிரமங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு அவர் தனது கடிதத்தில் தெரியப்படுத்தியுள்ளார் எனவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் ஜனவரி 31 ஆம் திகதி பதவியை இராஜினாமா செய்ய பி.பீ.ஜயசுந்தர அனுமதி கோரியுள்ளார் எனவும் அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர முன்னெடுத்த சில நடவடிக்கைகளே காரணம் என ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பகிரங்கமாக குற்றம் சுமத்தியுள்ளனர்.

அத்துடன், அவர் பதவி விலக வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த விடயம் தொடர்பில் அண்மையில் நிதி அமைச்சர், பிரதமர் உள்ளிட்டவர்கள் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனா ஊசி போட்ட தாதியிடம் தகாத முறையில் நடந்தவர் கைது!

முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் வைத்தியசாலையில் கொவிட் ஊசி போட்ட தாதி ஒருவரிடம் தகாத முறையில் நடந்துகொண்டார் எனக் கூறப்படும் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்த சம்பவம் வைத்தியசாலையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேற்படி நபர் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவரை எதிர்வரும் 05.01.2022 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுகாதாரப் பிரிவினரால் பாதுகாப்பான மற்றும் இலகுவான முறையில் மக்களுக்கான தடுப்பூசிகள் செலுத்தப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# சுனாமிப் பேரலையில் சாவடைந்த மக்களுக்குப் பிரதமர் அஞ்சலி

சுனாமி பேரனர்த்தத்தில் பதினேழு ஆண்டுகளுக்கு முன்னர் உயிரிழந்த இலங்கையர்களை நினைவுகூர்ந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் அலரி மாளிகையில் விளக்கேற்றினார்.

பிரதமரின் பாரியார் திருமதி ஷிரந்தி விக்ரமசிங்க ராஜபக்ஷவும் பிரதமருடன் இணைந்து விளக்கேற்றி சுனாமியில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்தார்.

முற்பகல் 9.25 மணிமுதல் 9.27 வரை மௌன அஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து விளக்கேற்றி உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்தனர்.

சுனாமி அனர்த்தம் உள்ளிட்ட பல்வேறு அனர்த்தங்களில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் 'தேசிய பாதுகாப்பு தினம்' நேற்றைய தினத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.



குறித்த சந்தர்ப்பத்தில் பிரதமர், பிரதமரின் பாரியார் மற்றும் இராணுவத்தினர், பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புப் பிரிவின் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## 'ஒமிக்ரோன்' தொற்றை தடுப்பதற்கு மூன்று முகக்கவசங்கள் அணியுங்கள்!

கொரோனாவின் ஒமிக்ரோன் தொற்று பரவல் ஆரம்பித்த பின்னரும் 'நீங்கள் தொடர்ந்தும் துணியிலான முகக்கவசங்களை அணிபராக இருந்தால்' மூன்று முகக்கவசங்களை அணிய வேண்டும் என்று சில வைத்திய நிபுணர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

அமெரிக்க சீ.என்.என். செய்திச்சேவை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மருத்துவ ஆய்வாளரான லீனா வென் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஒமிக்ரோன் இப்போது அமெரிக்காவில் கொரோனா வைரஸின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது.

இந்தநிலையில் ஒருவர் குறைந்தபட்சம் மூன்று அடுக்கு அறுவைச் சிகிச்சை முகமூடியை அணிந்திருக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு அகற்றப்படக்கூடிய முகக்கவசங்களை அணிந்து அதற்கு மேல் துணியிலான முகக்கவசத்தை அணியவேண்டும் என்று அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

எனினும் துணியிலான ஒரு முகக்கவசத்தை மாத்திரம் அணிய வேண்டாம் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

பொது இடங்களுக்கு செல்லும்போது கேஎன் 95 அல்லது என் 95 முகக்கவசங்களை அணியவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவே சிறிய துகள்கள் மூன்று அல்லது வாய் வழியாக உடலில் நுழைவதைத் தடுக்கிறது என்று மருத்துவ நிபுணர் தெரிவித்துள்ளார்.

## புஸ்ஸலாவ பகுதியில் விபத்து ஒருவர்சாவு; ஒருவர் காயம்

நுவரெலியாக் கண்டி பிரதான வீதியில் புஸ்ஸலாவ சரஸ்வதி மத்திய கல்லூரிக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்ததோடு, பெண் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியாவிலிருந்து கண்டி நோக்கி சென்ற ஓட்டோ நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை 9.45 மணியளவில் கட்டுப்பாட்டை இழந்து, புஸ்ஸலாவ பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததோடு, அதில் பயணித்த பெண் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளாகி கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த விபத்து தொடர்பில் புஸ்ஸலாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சிங்கப்பூரிலிருந்து இலங்கைக்கு மசகு எண்ணெய் கடனுக்கு!

கடனுதவி அடிப்படையில் இலங்கைக்கு மசகு எண்ணெயை வழங்க சிங்கப்பூர் இணக்கம் தெரிவித்துள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, சிங்கப்பூரில் இருந்து 180 நாள்களுக்குள் கடன் தீர்வு ஒப்பந்தத்தில் மசகு எண்ணெய் கொள்முதல் செய்யப்படும் என்றும், ஆறு கட்டங்களாக மசகு எண்ணெய் பெறப்படும் என்றும் அவர் கூறினார்.

சிங்கப்பூரில் இருந்து கடன் அடிப்படையில் பெறப்படும் மசகு எண்ணெய் ஜனவரி மாத நடுப்பகுதிக்குள் கிடைத்துவிடும் என்றும், அதன்படி சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தொடர்ந்து செயற்பட வாய்ப்பு இருப்பதாகவும் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# வெடிக்கக்கூடிய 4 லட்சம் எரிவாயு கொள்கலன்கள் மக்கள் வீடுகளில்?

## எச்சரிக்கும் போராசிரியர் ஜயதிலக்க

மூன்று முதல் நான்கு லட்சத்திற்கும் இடையிலான பாதுகாப்பற்ற சமையல் எரிவாயு கொள்கலன்கள் இன்னும் வீடுகளில் இருக்கின்றன என எரிவாயு வெடிப்பு சம்பந்தமாக ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணைக்குழுவின் உறுப்பினர் ஓய்வுபெற்ற பேராசிரியர் டப்ளியூ.டி.டப்ளியூ. ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

இந்த பாதுகாப்பற்ற எரிவாயு கொள்கலன்களைத் திரும்பப் பெறவேண்டும். எனினும் எரிவாயு நிறுவனங்கள் இதுவரையில் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை எனவும் ஜயதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

எரிவாயு விபத்துக்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணைக்குழு வழங்கிய அறிக்கையை ஜனாதிபதி செயலணிக் குழு ஆய்வுசெய்யவேண்டும் என்ற போதிலும் இது வரை அவர்கள் அதனை ஆய்வு செய்யவில்லை.

எரிவாயுவின் உள்ளடக்கத்தில் மாற்றம் செய்தாலும் மர்கெப்டன் அளவை சரியாகப் பேணி இருந்தால், நடந்த விபத்துக்களில் 50 வீதமான விபத்துக்களைத் தவிர்த்திருக்க முடியும் எனவும் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.



# நுட்பியல் அவத்தை

# இன்டர்நெட் ஒவ் திங்ஸ் அல்லது ஐ.ஓ.டி (IOT)



ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
virtualict22@gmail.com

02

மனித வரலாற்றில் தொற்றுநோய்கள் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் மனித வாழ்வில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. கடந்த ஆண்டுகளை எடுத்து நோக்கினால், உலகம் சில கொடிய தொற்றுநோய்களைக் கண்டுள்ளது. அதன் தாக்கங்கள் புதிய வாழ்க்கை ஒழுங்கை ஏற்படுத்தியிருக்கின்றன. தொற்று நோயிலிருந்து தப்பிப்பிழைப்பதற்காக புதிய கண்டுபிடிப்புக்கள் நடைபெற்றுள்ளன. அதன்வழி புதிய தொழில்நுட்பங்கள் கிடைக்கப்பெற்றன. இருப்பினும், கொவிட்-19 மேலுமொரு புதிய சூழலைத்தந்திருக்கிறது. அதன் வகையும் தாக்கமும் புதியது, ஆனால் கடந்தகால தொற்றுநோய்களுடன் தொடர்புடையது மற்றும் தொழில்நுட்பத்தால் அந்த நேரத்தில் மக்கள் எவ்வாறு பயனடைந்தனர் என்பது தற்போதைய சூழ்நிலையில் சிறந்த வழிகாட்டியாக கடந்தகால தொற்றுநோய்களில் பயன்படுத்தப்பட்ட சில வெற்றிகரமான தீர்வுகள் பற்றி நாங்கள் நோக்குவது மிகச்சிறந்தது. குறிப்பாக மனிதனின் உடல்நலத்துக்கான மருத்துவத்துறையில் ஒரு நெருக்கடியான சூழலில் பல கண்டுபிடிப்புக்கள், தொழில்நுட்பங்கள் துணைநின்றிருக்கின்றன.

இதில் மூன்று முக்கிய விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டன. நோய் கண்டறிதல், நோய் பரவலை கட்டுப்படுத்துதல் மற்றும் நோய் தடுப்பு ஆகியவற்றில் புதிய கண்டுபிடிப்புக்கள், தொழில்நுட்பம் மற்றும் தொடர்புடைய விடயங்கள் முக்கியம் பெறுகின்றன.

ஒரு நெருக்கடியை நுட்பியல் அவத்தை கையாண்டிருக்கிறது என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

தகவல் தொடர்பாடல் நுட்பங்கள் இதற்கு உதவியிருக்கின்றன. Internet of Things (IOT), Internet of Medical Things (IOMT), drones, robots, autonomous vehicles (AVS), Bluetooth, global positioning system (GPS) போன்ற தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் பெருந்தொற்றுநோய் சூழல் உருவாக்கிய சவாலான நிலைமைகளை கையாளுவதற்கு உதவியாக இருக்கின்றன.

**இன்டர்நெட் ஒவ் திங்ஸ் அல்லது ஐ.ஓ.டி((IOT)) அறிமுகம்**

இன்டர்நெட் ஆஃப் திங்ஸ் அல்லது என்பது கருவிகளுடனான ஒருவகையான இணையவழியான இணைப்பு ஆகும். பொருள்களை இணையம் மூலம் பிற சாதனங்களுடன் இது இணைக்கிறது. இன்டர்நெட் ஒவ் திங்ஸ் என்ற சொல்லை கெவின் ஆடன் என்பவர் முதலில் 1999 ஆம் ஆண்டில் குறிப்பிட்டார். இன்டர்நெட் ஒவ் திங்ஸ் என்பது மனிதர்களை விட கருவிகள் அல்லது பொருள்கள் இணையத்துடன் அதிகம் இணைக்கப்பட்டிருப்பதைக் குறிக்கிறது. கருவிகள் மற்றும் பொருள்கள் வழியாக தரவை இணையத்தில் சேகரித்து, ஆராய்ந்து வழங்குகின்றது. முக்கியமாக உட்பொதிக்கப்பட்ட செயலிகள், சென்சார்கள் பல்வேறு சூழல்களிலிருந்து தரவைச் சேகரித்து பகுப்பாய்வு செய்து தருகின்றது. இது தகவல்தொடர்பு கொண்ட ஸ்மார்ட் சாதனங்களால் இணைக்கப்பட்டதாகும். அதாவது, இன்டர்நெட் ஒவ் திங்ஸ் அல்லது ஐ.ஓ.டி.(IOT) என்பது ஒன்றோடொன்று தொடர்புடைய




கணினி சாதனங்கள், இயந்திர மற்றும் டிஜிற்றல் இயந்திரங்கள், பொருள்கள், தனிப்பட்ட அடையாளங்காட்டிகளைக் கொண்ட ஒரு கட்டமைப்பாகும். மனித குறுக்கீடில்லாமலே ஒரு வலையமைப்பில் தரவை வழங்கும் திறன் கொண்ட ஒரு அமைப்பாகும்.

உதாரணமாக, கண்காணிக்கப் பொருத்தப்பட்ட ஒரு கருவி, பயோசிப் டிரான்ஸ்பாண்டர் கொண்ட பண்ணை விலங்கு, ரயர் அழுத்தம் குறைவாக இருக்கும்போது ஓட்டுநரை எச்சரிக்க உள்ளமைக்கப்பட்ட சென்சார்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**ஐ.ஓ.டி.(IOT)) எப்படி வேலை செய்கிறது?**

ஐ.ஓ.டி.(IOT) செயலிகள், சென்சார்கள், கருவிகள் மற்றும் தகவல் தொடர்பு வன்பொருள் போன்ற உட்பொதிக்கப்பட்ட அமைப்புகளைப் பயன்படுத்தும் இணையத்தில் இயக்கப்பட்ட ஸ்மார்ட் சாதனங்களைக் கொண்டுள்ளது. சாதனங்கள் சேகரிக்கும் சென்சார் தரவை பிற சாதனத்துடன் இணைப்பதன் மூலம் பகிர்ந்து அங்கு தரவு சேகரிப்புதளத்துக்கு அனுப்பப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படும். சில சமயங்களில், இந்த சாதனங்கள் மற்ற தொடர்புடைய சாதனங்களுடன் தொடர்புகொண்டு, அவை ஒன்றிலிருந்து மற்றொன்று பெறும் தகவலின் அடிப்படையில் செயல்படுகின்றன. சாதனங்கள் மனித தலையீடு இல்லாமல் பெரும்பாலான வேலைகளைச் செய்கின்றன, இருப்பினும் மனிதன் இந்தச் சாதனங்களுடன் தொடர்பு கொள்ளலாம் - உதாரணமாக, அவற்றை கட்டமைக்கலாம், அறிவுறுத்தல்களை வழங்கலாம்.

இணையத்தில் தனித்தனியான சாதனங்கள் இணைக்கப்படும் போது, தரவை அனுப்புவதும் பெறுவதும், சிரமமான இருக்கும். அதனால் இன்டர்நெட் ஒவ் திங்ஸ் (IOT) உதவியுடன், இணையத்துடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து சாதனங்களையும் ஒன்றிணைத்து தகவல்களைப் பெறமுடிகிறது. இதில், இணைய வலையமைப்பு மூலம் தகவல் சேகரிக்கப்பட்டு அனுப்பப்படுகிறது. முக்கியமாக சென்சார்கள் உதவியுடன் செய்யப்படுகிறது. இது வெப்பநிலை சென்சார், காற்றின் தர அளவு சென்சார், ஈரப்பதம் சென்சார் மற்றும் ஒளி உணரி போன்றவையாக இருக்கலாம். இந்த சென்சார்கள் தானாக இணைக்கப்பட்டு, சரியான முடிவுகளை எடுக்க உதவும். அதாவது வெவ்வேறு சாதனங்களிலிருந்து தகவல்களைச் சேகரிக்கின்றன. உதாரணமாக, விவசாயிகள் தானாக மண்ணின் ஈரப்பதம் பற்றிய தகவலைப் பெற முடிந்தால், விவசாயத்திற்கு மீண்டும் எப்போது தண்ணீர் தேவை, எந்த நேரத்தில் மற்றும் அளவு போன்றவற்றை அவர்களால் தீர்மானிக்க முடியும். இது விவசாயிகளுக்கு விவசாயம் அல்லது பயிர்களுக்கு அதிக மற்றும் குறைந்த தண்ணீரை வழங்குவதை விட சரியான அளவு தண்ணீரை வழங்க உதவுகிறது. இது வளங்களை புத்திசாலித்தனமாக பயன்படுத்த உதவுகிறது மற்றும் வளத்தை வீணடிப்பதை இதன் உதவியுடன், ஒரு விவசாயி அதிக பயிர்களையும் பணத்தையும் அடைய முடியும்.

இதே போன்று இயந்திரங்கள் எவ்வாறு இயங்குகின்றன என்பதையும் இதன்மூலம் கண்காணிக்க முடியும்.

உதாரணமாக அச்சுப்பொறியொன்று இந்த வசதியினூடாக அச்சிடுவதற்கான தகவலைப் பெறுகிறது, பின்னர் அதை அச்சிடுகிறது. இது பல்வேறு தொழில்களின் நிறுவனங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. நிறுவனங்கள் அதிக செயல்திறனுடன் பணியாற்றவும், மேம்பட்ட சேவையை வாடிக்கையாளருக்கு வழங்கவும், முடிவெடுப்பதை மேம்படுத்தவும், வணிகத்தின் மதிப்பை அதிகரிக்கவும் உதவுகிறது. இது மைக்ரோ சர்வீஸ், வயர்லெஸ் மற்றும் ௨௦௨௦ தொழில்நுட்பத்தில் இருந்து உருவானது. மனித குறுக்கீடு அல்லது தொடர்பு இல்லாமல் இயந்திரங்கள் ஒன்றுக்கொன்று இணையத்துடன் இணைக்கும் போது தகவல்தொடர்பு மூலம் இது நடக்கிறது.


ஐ.ஓ.டி. (IOT), பெரு வணிக நிறுவனங்களும் பயன்படுத்துகின்றன. தமது நிறுவனம் திறமையாக செயல்படவும், மேம்பட்ட வாடிக்கையாளர் சேவையை வழங்கவும், வாடிக்கையாளர்களை நன்கு புரிந்து கொள்ளவும், முடிவெடுப்பதை மேம்படுத்தவும் மற்றும் வணிகத்தின் மதிப்பை அதிகரிக்கவும் பயன்படுத்துகின்றன. இந்தச் செயல்முறைக்கு நுண்ணறிவு தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. ஐ.ஓ.டி. (IOT) வணிகத்திற்கும் இன்றியமையாததாகிறது. உண்மையில் வணிகங்களுக்கு அவர்களின் அமைப்புகள் உண்மையில் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப் பற்றிய நிகழ்நேர தோற்றத்தை வழங்குகிறது, இயந்திரங்களின் செயல்திறன் முதல் விநியோக சங்கிலி மற்றும் தளவாட செயல்பாடுகள் வரை அனைத்தையும் பற்றிய நுண்ணறிவுகளை வழங்குகிறது. இந்தத் தரவுகள் வணிக நிறுவனங்களுக்கு செயல்முறைகளைத் தானியக்கமாக்குவதற்கும் தொழிலாளர் செலவுகளைக் குறைப்பதற்கும் உதவுகிறது. இது சேவை விநியோகத்தை மேம்படுத்துகிறது, பொருள்களை உற்பத்தி வழங்குவதற்கும் குறைந்த செலவை உருவாக்குகிறது, அத்துடன் வாடிக்கையாளர் பரிவர்த்தனைகளில் வெளிப்படைத்தன்மையை வழங்குகிறது.

ஐ.ஓ.டி.(IOT), பொதுவாக உற்பத்தி, போக்குவரத்து போன்ற நிறுவனங்களில் அதிக அளவில் பயன்பாட்டில் உள்ளது. இந்த சேவையைப் பயன்படுத்தி விவசாயிகள் தங்கள் வேலையை எளிதாக்குவதன் மூலம் விவசாயத்தில் பயனடையலாம். மழைப் பொழிவு, ஈரப்பதம், வெப்பநிலை மற்றும் மண்ணின் உள்ளடக்கம் மற்றும் விவசாய நுட்பங்களை தானியக்கமாக்க உதவும் பிற காரணிகள் பற்றிய தரவுகளை சென்சார்கள் மூலம் சேகரிக்க முடியும்.

இதே உள்கட்டமைப்புச் சேவையிலும் ஐ.ஓ.டி.(IOT) பயன்படுத்தப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, கட்டடங்கள், பாலங்கள் மற்றும் பிற உள்கட்டமைப்புகளில் நிகழ்வுகள் அல்லது மாற்றங்களைக் கண்காணிக்க சென்சார்கள் பயன்படுத்தப்படலாம். அதன் மூலம் கிடைக்கும் தகவல்கள் மூலம் அவற்றை சிறப்பாக நிர்வகிக்கலாம். மேலும் இதனால் ஒரு கட்டடத்தில் இயந்திர மற்றும் மின் அமைப்புகளை கண்காணிக்கவும் கையாளவும் முடியும்.

எனவே, ஐ.ஓ.டி.(IOT) என்பது அன்றாட வாழ்க்கையின் மிக முக்கியமான தொழில்நுட்பங்களில் ஒன்றாகும்.

காலைக்கதிர்
Kalaikkathir



# ஐ.நா. நேரில் களமிறங்கும்
## அரசுக்கு எதிரணி எச்சரிக்கை

2022 மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரை ஆட்சி யாளர்கள் எவ்வாறு சமாளிப் பார்கள் எனத் தெரியவில்லை. உறுப்புரிமை நாடுகள் இம் முறை இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றிக் கொண்டிருக்கமாட்டார்கள். நடைமுறைக்குச் சாத்தியமான நடவடிக்கையில் அவர்கள் நேரில் களமிறங்குவார்கள்.

- இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட எதிரணியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. மேலும் கூறியதாவது:-

சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பின்றி இலங்கை போன்ற நாடுகளால் முன்னோக்கிப் பயணிக்க முடியாது.

உள்நாட்டுப் போர் முடிவடைந்த பிறகு, அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நான் முக்கியமானதொரு விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தேன். அதாவது மண்டேலாவின் வழி, முகாபேயின் வழியென இரண்டு வழிகள் உள்ளன. மண்டேலாவின் வழியைத் தெரிவு செய்யுமாறு கோரினேன். ஆனால் முகாபேயின் வழியையே மஹிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்தார். இதன் விளைவு என்ன? ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் தொடர்ச்சியாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

2015 மார்ச்சில் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என்ற அச்சத்தாலேயே முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை நடத்தி அவர் தோல்வியைச் சந்தித்தார்.

தற்போதைய அரசும் இதே வழியில் தான் பயணிக்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நாட்டுக்குத் தோல்வி ஏற்படுகின்றது. சர்வதேச ஒத்துழைப்பு இருந்தால் பல விடயங்களை சாதித்துக் கொள்ளலாம். குறிப்பாக நல்லாட்சியின் போது நாம் அதனை செய்தோம். மின்சாரக் கதிரை அபாயத்திலிருந்து மஹிந்தவைப் பாதுகாத்தோம்.

ஆனால், இந்த அரசால் சர்வதேச ஆதரவைப் பெற முடியாதுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மீண்டும் கூடவுள்ளது. இம்முறை அதனை ஆட்சியாளர்கள் எவ்வாறு சமாளிப்பார்கள் எனத் தெரியவில்லை, இம்முறை தீர்மானம் நிறைவேற்றிக்கொண்டிருக்கமாட்டார்கள், நடைமுறைக்கு சாத்தியமான நடவடிக்கையில் இறங்குவார்கள். ஏனெனில் தீர்மானம் நிறைவேற்றி பயனில்லை என்பதை அறிந்துள்ளனர். இது தொடர்பில் நான் வெளிவிவகார அமைச்சருக்கு அறிவித்துள்ளேன் - என்றார்.

# இராணுவ ஆட்சி உடன் வேண்டும்!
## கோட்டாபய நியமித்த 'ஒரே நாடு - ஒரே சட்டம்' செயலணியின் தலைவர் ஞானசாரர் கருத்து

நெருக்கடி நிலைமைகளிலிருந்து நாட்டை மீட்க வேண்டுமென்றால் நாட்டை இராணுவத்திடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டும் என்பதே எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும். அதுமட்டுமல்ல இராணுவ ஆட்சி எனக் கூவிக் கொண்டு ஜனநாயகக் கதைகளைக் கூறி வருவோரை சிறையில் அடைக்க வேண்டும்.

- இவ்வாறு பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளரும், 'ஒரே நாடு - ஒரே சட்டம்' தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவருமான கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதை ஏற்றுக்கொண்டால் தமிழர்களாலும் ஆட்சியை நடத்த முடியும். நீதி அமைச்சர் பதவியிலிருந்து அலி சப்றி உடனடியாக நீக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு வார இதழொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

### மாணிக்க விநாயகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாணிக்க விநாயகம் தனது 78 ஆவது அகவையில் சென்னையில் உள்ள அவரது வீட்டில் நேற்று மாலை 6.45 மணிக்கு மாரடைப்பால் காலமானார்.

திருடா திருடி, சந்தோஷ் சுப்பிரமணியம், திமிரு, பேரழகன், வேட்டைக்காரன் உள்ளிட்ட பல்வேறு படங்களில் அவர் நடித்துமுள்ளார்.

பருத்தி வீரன், வெயில், சந்திரமுகி, தூள் உள்ளிட்ட படங்களில் பாடல்களை பாடியுள்ளார். மயிலாடுதுறை அடுத்த வழுவூர் கிராமத்தை பூர்விகமாகக் கொண்டவர். பழம்பெரும் பரத நாட்டிய ஆசிரியர் வழுவூர் ராமையாவின் மகனாவார்.

இதேநேரம் ஈழத் தமிழர்களின் நெஞ்சம்கொண்ட பாடலான -

"விடை கொடு எங்கள் நாடே
கடல் வாசல் தெளிக்கும் வீடே
பனை மர காடே, பறவைகள் கூடே
மறுமுறை ஒரு முறை பார்போமா"

- என்னும் பாடலைப் பாடியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### குளத்திலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ளதாக செட் டிகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று மாலை குளத்திற்கு சென்றவர்கள் குளத்தில் சடலம் ஒன்று இருப்பதை அவதானித்து பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா, செட்டிகுளம், தம்பனைக்குளம் பகுதியைச் சேர்ந்த ஹரிந்து கோசல்யுஸ் வெத்தியாராச்சி (வயது 24) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த இளைஞர் வீட்டில் இருந்து நேற்றைய தினம் நண்பர்களுடன் சென்ற நிலையில் வீடு திரும்பவில்லை. அவரை அவரது வீட்டார் தேடி வந்த நிலையிலேயே குளத்தில் இருந்து சடலமாக அவர் மீட்கப்பட்டுள்ளார்.

இளத இளைஞரின் மரணம் தொடர்பில் உறவினர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ள நிலையில், செட்டிகுளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### வடக்கில் சீனாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கண்காணிப்புக்கு உட்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், வடக்கில் மூன்று தீவுகளில் நிர்மாணிக்கப்படவிருந்த மூன்று கலப்பு மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணிக்கும் திட்டத்தை சீனா, மாலை தீவுக்கு மாற்ற தீர்மானித்தது.

காற்று, சூரிய சக்தி ஆகியவற்றை கொண்ட கலப்பு மின் உற்பத்தி நிலையங்களை சீனா நிர்மாணிக்கவிருந்த தீவுகள் இந்தியாவின் தென் பகுதிக்கு மிக அருகில் இருப்பதால், இந்திய அரசு இதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது.

இலங்கையில் இந்திய றோ புலனாய்வுப் பிரிவினர் நீண்டகாலமாக செயற்பட்டு வந்த போதிலும் அவர்கள் இலங்கையில் செயற்படுகின்றனர் என்ற உத்தியோபூர்வ தகவல் ஈஸ்டர் ஞாயிறு தீவிரவாத தாக்குதலுடன் தெரியவந்தது எனவும் அந்த சிங்களப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

### கட்சியின் சக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐங்கரநேசன் கேள்வியெழுப்பினார்.

தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் சமகால அரசியல் உரையரங்கொன்று நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஒரு சிலர் 'இராஜதந்திரம்' என்று கூறுகின்றனர். அவர்கள் நல்லாட்சி அரசின் காலப்பகுதியிலும் அதனையே கூறினர். இன்றும் அதனையே கூறுகின்றனர்.

'இராஜதந்திரம்' என்பது நாடுகளுக்குரியது. நாடுகள் பல்வேறு வகையான அழுத்தங்களைப் பிரயோகித்து தங்களுக்கு வேண்டியதை சாதித்துக் கொள்வதையே இராஜதந்திரம் என்பர். ஆனால் விடுதலைப் புலிகள் இருந்த காலப்பகுதியில் அவர்கள் அரசுக்கான கட்டமைப்புக்களை கொண்டிருந்ததன் காரணமாக 'இராஜதந்திர பக்கம்' அவர்களுக்கு இருந்தது. அன்டன் பாலசிங்கம் அந்த பாத்திரத்தை செய்திருந்தார். இன்று எல்லோருமே விடுதலைப் புலிகளாகவோ, விடுதலைப் புலிகளின் தலைவராகவோ, அன்டன் பாலசிங்கம் போலவோ ஆகிவிட முடியாது.

ஒரு கட்சியிலேயே இருக்கக் கூடிய ஏனைய உறுப்பினர்களுக்கு தெரியாமல் - என்ன நாங்கள் பேசப் போகின்றோம் என்பது தெரியாமல் - போய்விட்டு வந்து இராஜதந்திரம் என்று கூறுவதை நாங்கள் தொடர்ச்சியாக ஏற்றுக் கொண்டு இருக்கப் போகிறோம் என்ற கேள்வி எழுகின்றது. அரசியல் கட்சிகளின் கூட்டு எதையும் சாதித்து விடப் போவதில்லை. நாளை தேர்தல் நடந்தால் இந்த கட்சிகள் எல்லாம் எதிரும் புதிருமாக இருக்கும்.

13 ஆவது திருத்தம் தொடர்பாக கட்சிகள் ஒன்று கூடுகின்ற பொழுதே உள்ளூராட்சி சபை வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பில் அந்த கட்சிகள் ஆளாளுக்கு குழிபறித்து தோற்கடிக்கின்றனர்.

உள்ளூராட்சி மன்றங்களிலேயே இந்த கட்சிகள் இவ்வாறு செயற்பட்டால் நாடாளுமன்றத்திலும் மாகாணசபையிலும் இந்த கூட்டு எந்தளவு தூரத்திற்கு செயற்படப் போகிறது? ஆகவே இந்த இடத்தில் சிவில் சமூகத்தின் பங்களிப்பு மற்றும் பிரசன்னமும் அவசியம்.

அவர்களது கை ஓங்கி இருக்கின்ற பொழுது தான் கட்சி சார் அரசியல்வாதிகளை ஓரளவு கட்டுக்கோப்பாக வைத்திருக்க முடியும்.

எங்களிடம் கட்சிகள் இருக்கின்றன. தலைவர்கள் இருக்கிறார்கள். ஆனால் தேசியத்தலைவர் என்று இல்லை. ஆனால் கட்சிகளின் தலைவர்கள் தங்களை தேசிய தலைவர்களாக கற்பிதம் செய்து கொள்வது அபத்தமானது. - என்றார்.

### ஆழிப்பேரலையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகமான உயிர்கள் காவுகொள்ளப்பட்ட வடமராட்சி கிழக்கில் பிரதான நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

அங்கு சுமார் ஆயிரத்து முப்பத்து எட்டு பேர் சுனாமி அனர்த்தத்தில் காவு கொள்ளப்பட்டனர்.

பிரதான நிகழ்வு உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் நினைவேந்தல் குழுவின் தலைவர் வே.தவராசா தலைமையில் இடம்பெற்றது.

நினைவிடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் முதல் மாலை அணிவித்தார். அதனைத் தொடர்ந்து பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ.சா. அரியகுமார், முன்னாள் நாடாளுமன்ற மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் றஜீவன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பிரமுகர், மருதங்கேணி பிரதேச செயலர் பிரபாகரமூர்த்தி, மருதங்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அபயசிங்க ஆகியோர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து நினைவிடத்துக்குக் காணியை அன்பளிப்புச் செய்த ஓய்வுநிலை உதவி அரச அதிபர் புத்திரசிகாமணியின் பாரியார் ஜெகஜோதி பொதுச் சுடர் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து உடலங்கள் புதைக்கப்பட்ட இடங்களில் அவர்களின் உறவினர்கள் தீபம் ஏற்றி மலர் அஞ்சலி செலுத்தியமையுடன் அவர்கள் விரும்பி உண்ணும் உணவுகளைப் படைத்து ஒப்பாரி வைத்து ஓலம் இட்டனர். இதனால் அப்பகுதி எங்கும் சோகமயமாகக் காட்சி அளித்தது.

இதேபோல் உடுத்துறை பத்தாம் வட்டாரத்தில் சுமார் 50 உடல்கள் புதைக்கப்பட்ட இடத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ.சா. அரியகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மணற்காட்டுப் பகுதியில் 72 உடலங்கள் ஒரே இடத்தில் அடக்கம் செய்யப்பட்ட சவக்காலப் பிட்டியில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. முன்னதாக மணற்காடு புனித அந்தோணியார் ஆலயத்தில் பங்குத்தந்தை திருப்பலி ஒப்புக்கொடுத்தைத் தொடர்ந்து சுனாமி நினைவாலயத்தில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து 72 உடலங்கள் புதைக்கப்பட்ட சவக்காலைப் பிட்டியில் அவர்களின் உறவினர்கள் உணவுப்பொருள்களை படைத்து பிள்ளைகளின், உறவுகளின், பெற்றோரின் இழப்பைத் தாங்கமுடியாது ஓலமிட்டு கதறி அழுதனர். இதனால் அப் பகுதி எங்கும் சோகமயமாகக் காட்சியளித்தது.

இதேபோல் வடமராட்சி, புலோலி சூசையப்பர் ஆலயத்தில் உடலங்கள் புதைக்கப்பட்ட இடத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

முன்னதாக புலோலி சூசையப்பர் ஆலயத்தில் பருத்தித்துறை கோட்ட பங்குத்தந்தை திருப்பலி ஒப்புக்கொடுத்ததையடுத்து உடலங்கள் புதைக்கப்பட்ட இடத்தில் உறவினர்கள் கண்ணீருடன் அஞ்சலி செலுத்தினர்.

இதேபோன்று தாளையடி, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி உள்ளிட்ட இடங்களில் ஆங்காங்கே உடலங்கள் புதைக்கப்பட்ட இடங்களில் அவர்களது உறவினர்கள் அஞ்சலி செலுத்தினர்.

### பேராயர் டுட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காலமானார். இத்தகவலை தென்னாபிரிக்காவின் அதிபர் சிரிஸ் ரமபோசா அறிவித்துள்ளார்.

நிறவெறி எதிர்ப்பு சின்னமான நெல்சன் மண்டேலாவுடன் போராடிய சமகாலத்தவர் இவர். தென்னாப்பிரிக்காவில் 1948 முதல் 1991 வரை கறுப்பின பெரும்பான்மையினருக்கு எதிராக வெள்ளை சிறுபான்மை அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்ட இனப் பிரிவினை மற்றும் பாகுபாடு கொள்கையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான இயக்கத்தின் உந்து சக்திகளில் ஒருவராக இருந்தார்.

டுட்டுவின் மரணம் தென்னாப்பிரிக்காவின் கடைசி நிறவெறி காலத்தின் ஜனாதிபதியான எஃப்.டபிள்யூ டி கிளார்க் தனது 85 வயதில் காலமான சில வாரங்களுக்குப் பிறகு நடந்துள்ளது.

நிறவெறி முறையை ஒழிப்பதற்கான போராட்டத்தில் அவர் ஆற்றிய பங்கிற்காக 1984 இல் அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

தென்னாபிரிக்காவின் விடுதலையைப் பெற்றுத்தரப் போராடியர் பேராயர் டெஸ்மண்ட டுட்டு. இவரின் இழப்பு ஒரு தேவாலயத்தின் மரணம். சிறந்த தென்னாப்பிரிக்கர்களின் தலைமுறைக்கு நமது நாட்டின் பிரியாவிடையின் மற்றொரு அத்தியாயத்தைக் குறிக்கிறது என்றார் ரமபோசா.

டுட்டு ஒரு சின்னமான ஆன்மீக தலைவர், நிறவெறி எதிர்ப்பு ஆர்வலர் மற்றும் உலகளாவிய மனித உரிமை பிரசசாரகர் என்று ரமபோசா கூறினார்.

### பஸ் கட்டணங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கொள்ளப்படும் எனக் கூறியுள்ளார்.

எரிபொருள்களின் விலை உயர்வு காரணமாக பஸ் கட்டணங்களில் திருத்தம் செய்ய வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது. பயணிகளினது நன்மை தொடர்பில் சிந்தித்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் மேலும் கூறினார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.12.2021 இல் வெளியிடப்பெற்றது.